LIBRARY
23 AUG 2013
EASTERN UNIVERSITY, SRI LANKA

கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

முதலாம் வருட வெளிவாரிப் பரீட்சை 2010/2011

TL 101 தமிழ் இலக்கிய வரலாறும் குறிப்பிட்ட பாட நூல்களும்

நேரம் : 03 மணித்தியாலங்கள்

ஒவ்வொரு பகுதியிலிருந்தும் குறைந்தது இரு வினாக்களையேனும் தெரிவு செய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடையளிக்குக.

## பகுதி – I

1. இலக்கிய வரலாறு என்றால் என்ன என விளக்கி தமிழ் இலக்கிய வரலாற்றுக் காலகட்டங்கள் எந்த அடிப்படையில் வகுக்கப்பட்டுள்ளன என்பதை ஆராய்க.
2. அ) சங்ககால இலக்கியங்களின் பொருள் மரபை விளக்குக.

   ஆ) புறப்பொருள் மரபை ஆதாரமாகக் கொண்டெழுந்த ஆற்றுப்படை இலக்கியங்களின் பண்பினை விளக்கி அதன் முக்கியத்துவத்தை மதிப்பிடுக.
3. அ) பல்லவர் காலம் பக்தி இலக்கிய காலம் எனக் கூறப்படுவதற்கான ஆதாரங்கள் யாவை?

   ஆ) சங்க இலக்கிய அகத்திணை மரபு பல்லவர் கால பக்திப்பாடல்களில் கையாளப்பட்டிருக்குமாற்றை விளக்குக.
4. விஜயநகர நாயக்கர் கால இலக்கியங்களின் பண்புகளை உதாரணங்களுடன் விளக்குக.

## பகுதி – II

5. பின்வரும் குறுந்தொகைப் பாடலை வாசித்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடையளிக்குக

கருங்கால் வேம்பின் ஒண் பூ யாணர்
என்னை இன்றியும் கழிவது கொல்லோ
ஆற்றயல் எழுந்த வெண் கோட்டதவத்து
<u>எழுகுளிறு மிதித்த ஒருபழம் போலக்</u>
<u>குழைய கொடியோர் நாவே</u>
காதலர் அகல கல்லென்றவ்வே

I. இப் பாடலைப் பாடியவர் யார்?

II. இது யார் கூற்றாக அமைந்துள்ளது?

III. அடிக் கோடிட்ட பகுதியின் சிறப்பை விளக்குக.

IV. பாடலின் பொருளை எளிய நடையில் எழுதுக.

6. ஆய்ச்சியர் குரவை முதல் வழக்குரை காதை வரையுள்ள பகுதியை ஆதாரமாக வைத்துக் கெ இடைச்சேரி மக்களின் வாழ்க்கை முறைகளையும் நம்பிக்கைகளையும் விளக்குக.

7. கும்பகர்ணன் வதைப்படலத்தில் கும்பகர்ணனின் போர்த்திறம் வர்ணிக்கப்படுமாற்றை மதிப்பிடுக.

8. 'நவீன தமிழ்க் கவிதையின் முன்னோடியாக பாரதியாருடைய கவிதைகள் அமைந்துள்ளன.' இக் கூற்றின் பொருத்தப்பாட்டை ஆராய்க.

அல்லது

நீலாவணனின் கவிதைகளினூடாக கிழக்கிலங்கை மக்களின் வாழ்க்கைமுறை வெளிப்படுத்தப்படு மாற்றை விளக்குக.